Nestlé Good food, Good life

# பத்திரிகை செய்தி வெளியீடு

கொழும்பு, மே 9, 2022

**நெஸ்லே லங்கா நிறுவனத்தைச் சேர்ந்த சமரிது மற்றும் மினிந்து ஆகியோர் 'Cannes Lions Young Marketer Competition 2022' போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்**

*இருவரும் 'Cannes Lions International Festival of Creativity' நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்*

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் சமரிது விதாரண மற்றும் மினிந்து அலஸ் ஆகியோர் மிகவும் புகழ்பெற்ற Cannes Lions Young Marketer Competition 2022 போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். உள்நாட்டு போட்டியை வென்ற இருவரும் தற்போது ஜூன் மாதம் நடைபெறவுள்ள 'Cannes Lions International Festival of Creativity' நிகழ்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (SLIM) தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக Metal Factor உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போட்டியில், நாட்டின் முன்னணி நிறுவனங்களில் இருந்து மிகவும் திறமையான சந்தைப்படுத்தல் வல்லுனர்களைக் கொண்ட 20 அணிகள் பங்குபற்றியிருந்தன. தனது இளம் திறமைசாலிகளுக்கு சான்றாக, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அணி இந்த மதிப்புமிக்க விருதை வெல்வது இது மூன்றாவது முறையாகும்.

"இந்த வெற்றியால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். நெஸ்லே லங்கா நிறுவனத்தில் எங்களின் தொழில் வாழ்க்கையில் கிடைத்த அனைத்து வாய்ப்புகள், கற்றல் மற்றும் அனுபவங்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இது நாட்டின் சிறந்த இளம் சந்தைப்படுத்தல் வல்லுனர்களுக்கு எதிராக வெற்றிகரமாக போட்டியிட எங்களுக்கு உதவியது. உலக அரங்கில் நம் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவது ஒரு பெரும் பாக்கியம். வாழ்நாளில் ஒருமுறையே கிடைக்கும் இந்த அரிய வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி, நெஸ்லே லங்கா நிறுவனம் மற்றும் இலங்கைக்கு பெருமையை ஈட்டிக் கொடுக்க முடியும் என்று நம்புகிறோம்!" என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் சாதாரண வெப்பநிலையில் பேணக்கூடிய பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களின் சிரேஷ்ட வர்த்தகநாம அதிகாரியான சமரிது விதாரண மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ பவுடர் உற்பத்தியின் உதவி வர்த்தகநாம முகாமையாளரான மினிந்து அலஸ் ஆகியயோர் கருத்து தெரிவித்தனர்.

Cannes Lions Young Marketer Competition எனப்படும் போட்டியானது விளம்பரப்படுத்தல் மற்றும் படைப்பாக்க தகவல் தொடர்பாடல் துறையில் மிகவும் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு போட்டியாகும். இது Cannes Lions International Festival of Creativity நிகழ்வின் ஒரு அங்கம் என்பதுடன், விளம்பர வல்லுநர்கள், வடிவமைப்பாளர்கள், டிஜிட்டல் புத்தாக்குனர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வல்லுனர்களின் மிகப்பெரிய உலகளாவிய ஒன்றுகூடல் களமாகக் கருதப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள அணிகள் வருடாந்த நிகழ்வில் ஒன்றிணைந்து, ஆக்கபூர்வமான வர்த்தகநாம தகவல்தொடர்பாடல்களைக் கொண்டாடவும், தொழில்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவும், மற்றும் ஒருவருக்கொருவர் தொடர்புகளை ஏற்படுத்தவும் வழிகோலும் களமாக இது அமைந்துள்ளது.

நல்லுணவு மற்றும் நல்வாழ்வுக்கான அத்திவாரமான நிறுவனமான நெஸ்லே, இலங்கையில் 115 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்றுள்ளது. சமூகங்களுக்கு நற்காரியங்களை ஆற்றுவதன் மூலம், இலங்கையின் இளைஞர்,யுவதிகளை வலுவூட்டுவதற்காக இந்நிறுவனம் பல முயற்சிகளை மேற்கொண்டு, அவர்கள் தமது ஆற்றலை முழுமையாக வெளிக்கொணர உதவி வருகிறது.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |